அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஜனவரி - 2025 | மரம் - 4 | கன்று - 1 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-



பிள்ளைகளே,

## எனக்குச் செவிகொடுங்கள்;

என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

நீதிமொழிகள் 8:32

ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் பாசத்திற்குரிய எனதன்பு **ஒலிவமரக் கன்றுகள்** இதழின் வாசகப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறார் இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

திட்டமிட்டுப் பறப்பவர்கள் கழுகைப் போன்றவர்கள். அவர்களுடைய சிறகுகள் அவர்களுக்கு வலுவூட்டும். அவர்களுடைய பார்வை அவர்களுக்குத் திசைகளைக் காட்டும். அவர்களுடைய பயணம் அவர்கள் திட்டமிட்ட திசையில் நடக்கும். அவர்களுடைய வெற்றியையோ, தோல்வியையோ இன்னொருவர் நிர்ணயிக்க முடியாது. அவர்களுடைய வாழ்க்கை மொத்தத்தில் அவர்களால் நிர்ணயிக்கப்படுகிறது.

வெற்றியின் ரகசியங்களில் ஒன்று இது தான். வெற்றி என்பதைப் பெற ஏதேதோ வேண்டுமென நாமாகவே கருதிக் கொள்கிறோம். ஆனால் சில வேளைகளில் வெற்றிக்காக சரியான திட்டமிடுதலும், தயாரித்தலுமே போதுமானதாக இருக்கிறது.

உட்கார்ந்து எழுதவே ஒரு இடம் இல்லாமல் கஷ்டப்பட்டார் ஒரு எழுத்தாளர். வெளியே உறைய வைக்கும் குளிர். கையில் போதுமான அளவு பணம் இல்லை. ஒரே ஒரு காபி வாங்கிக் கொண்டு அந்த காபி ஷாப்பில் பல மணிநேரம் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். ஒரு நாவலுக்கான முயற்சியில் தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அந்தத் தயாரிப்பு தான் அந்த எழுத்தாளரை உலகப் புகழ் பெற்ற எழுத்தாளராக்கியது. இன்று அவருடைய நாவலுக்காய் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் விடியற்காலையிலேயே கடைகளில் நிரம்பி விடுகிறது கூட்டம். அவர்தான் ஹாரிபாட்டர் நாவலை எழுதிய ஜே.ஜே. ரௌலிங்கர்.

வெற்றியை நோக்கிய பயணத்தில் இந்த தயாரிப்பு ரொம்பவே அவசியம். இன்றைக்கு வெற்றியாளர்களுடைய வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கும்போது புலப்படும் விஷயம் ஒன்று தான். அவர்கள் தங்கள் இலட்சியத்துக்காக தங்களைத் தயாரித்துக் கொண்டார்கள்.

அலெக்சாண்டர் கிரகாம்பெல்லிடம் ஒருமுறை கேட்டார்கள் ''உங்கள் வெற்றிக்கான ரகசியம் என்ன ?''



''வேறொன்றுமில்லை, சிறப்பாகத் தயாராவதே எனது வெற்றியின் ரகசியம்'' என்று பளிச் எனப் பதிலளித்தார் அவர்.

தயாராதல் வெற்றியின் ரகசியம். தயாராவோம் வெற்றிகள் அவசியம்.

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# வசம்பு



''என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும்... உன் தோட்டம் மாதளஞ்செடிகளும், அருமையான கனிமரங்களும், மருதோன்றிச் செடிகளும், நளதச்செடிகளும், நளதமும், குங்குமமும், வசம்பும், லவங்கமும், சகலவித தூபவர்க்க மரங்களும், வெள்ளைப்போளச்செடிகளும், சந்தன விருட்சங்களும், சகலவித கந்தவர்க்கச்செடிகளுமுள்ள சிங்காரவனமாயிருக்கிறது'' (உன்னதப்பாட்டு 4:12-14).

மணவாளி என்ற சொல் ஆங்கிலத்தில் SPOUSE என்று இருக்கிறது. மணவாளி என்றால் வாழ்க்கைத் துணை என்று பொருள். நாம் இயேசுவினுடைய மணவாளி.

மணவாளி தோட்டம். அது அடைக்கப்பட்ட தோட்டம். தேவனுக்காய் பிரித்தெடுக்கப்பட்டது. தேவனுக்குச் சொந்தமானது, வேலி அடைக்கப்பட்டது. வேறு மனிதர்களோ, விலங்குகளோ தோட்டத்தில் உள்ளே வந்து தோட்டத்தை கெடுக்க முடியாது. தோட்டம் என்பது ஒரு தோட்டக்காரனாலே திட்டமிட்டு உருவாகிறது. தோட்டத்தில் ஒரு ஒழுங்கும் கிரமமும் காணப்படும். தோட்டத்தை தோட்டக்காரன் விசாரிப்பான், நீர் பாய்ச்சுவான். கிளை நறுக்குவான். பூச்சிக்கொல்லி மருந்து போடுவான். இன்றைக்கு அநேகரது வாழ்க்கை தோட்டமாய் இல்லாமல் வெறும் காடாக இருக்கிறது. எந்த ஒழுங்கும் கிடையாது. யாரும் விசாரிப்பது கிடையாது. யாரையும் விசாரிக்க விடுவதும் கிடையாது. தன்னுடைய இஷ்டம் போல் வாழ்கிறார்கள். காட்டில் செடி வளர்வது போல் வளர்கிறார்கள். மணவாளியான நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து, பிரியமாய் நடக்க வேண்டும். பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும். ஒழுங்கு நெறியைக் கைக்கொள்ள வேண்டும்.

மணவாளியின் தோட்டத்தில், கனி மரங்களும், வாசனை வீசும் செடிகளும் இருப்பது போல, நம்மில் ஆவியின் கனிகள் காணப்பட வேண்டும். தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக வேண்டும். கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனை நம் வாழ்க்கையில் வீச வேண்டும். எல்லா இடத்திலும் எப்பொழுதும் நம்மை வெற்றி சிறக்கப்பண்ணுகிற அவரை அறிகிற அறிவின் வாசனை வீச வேண்டும்.

'பிள்ளை வளர்ப்பான்' என்று அழைக்கக்கூடிய **வசம்பு** (Sweet Flag) என்பது ஒரு பிரபலமான இயற்கை மற்றும் மருத்துவ மூலிகையாகும். இதன் தாவரவியல் பெயர் Acorus calamus. பாட்டி வைத்தியம் என்று நம் முதியோர்கள் அடிக்கடி வீட்டு வைத்தியத்தில் சேர்ப்பது இந்த வசம்பைத்தான். வசம்பு இஞ்சி வகையைச் சேர்ந்த மூலிகை. இது பாரம்பரியமாகவே பிறந்த குழந்தைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.



வசம்பின் பிறப்பிடம் தென்கிழக்கு அமெரிக்கா. வசம்பு ஐரோப்பா முழுவதிலும், தென் ரஷ்யாவிலும், சின்னாசியாவின் வடக்கிலும், தென் சைபீரியா, சீனா, இந்தோனேசியா, ஜப்பான், மியான்மர், இலங்கை, ஆஸ்திரேலியா, தென் கனடா, ஐக்கிய அமெரிக்காவின்



வடபகுதி ஆகிய இடங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இது இந்தியாவில் மணிப்பூரிலும், நாகமலையிலும் கேரளாவிலும் அதிகமாக வளர்கிறது. இது ஆறு, ஏரிக்கரையோரங்களில் வளரும் ஒரு வகைப் பூண்டு. சதுப்பு நிலங்கள், களிமண் மற்றும் நீர் பிடிப்புள்ள பகுதிகள் மிகவும் ஏற்றவை.

வசம்பின் இலைகள் 2-3 அடி உயரம் வரை வளரும். வேர்கள் மஞ்சள் கிழங்கைப்போல் நெருக்கமான கணுக்களையுடையவை. இதன் தண்டு வேர் பெருவிரல் அளவு தடிமன் உடையதாகவும் தண்டின் மேற்பகுதி சாம்பல் நிறத்துடனும் இருக்கும். வேர்கள் பூமிக்கடியில் சுமார் 3 அடி நீளம் வரை படரும். வேர்கள் தான் வசம்பு என்பது. நட்ட ஒரு ஆண்டில் பயிர் முதிர்ந்து மஞ்சள் நிறமாக மாறும் தருணத்தில் அதாவது ஒரு ஆண்டில் கிழங்கை வெட்டி எடுக்கப்படுகிறது. இந்த வசம்பில் அசரோன், அகோரின் மற்றும் கொலாமினால் போன்ற வேதிப் பொருள்கள் உள்ளன. இது நல்ல வாசனையையுடையது. இந்த வசம்பானது, பேர் சொல்லா மருந்து, பிள்ளை வளர்த்தி, பிள்ளை மருந்து மற்றும் உரைப்பான் என்றும் அழைக்கப்படுகிறது.

இதன் வேர்களில் பீட்டா - அசரோன், பீட்டா - குர்ஜூனின், Z அசரோனின், அரிஸ்டோலின், E அசரோனின், சீக்வெஸ்டர்பென்ஸ் - நார்க்வெஸ்டர்பைன், A&H மற்றும் பீட்டா-டௌகாஅஸ்டெரால் போன்ற இராசயனங்கள் உள்ளன. இவை உடலுக்கு நன்மை பயக்கும் இரசாயனங்கள் ஆகும்.

வசம்பு வேரானது நிறைய மருத்துவ குணங்கள் நிறைந்தது. வசம்பின் வேர்கள் பழங்காலம் முதல் மருந்துகள் தயாரிப்பதற்குப் பயன்படுகிறது.

வசம்பு என்பது ஆயுர்வேதத்தில் வச்சா என்று அழைக்கப்படுகிறது. கிராமத்தில் உள்ளவர்கள் இன்றளவிலும் சரி காய்ந்த வசம்பை சூடுபடுத்தி பாலில் கலந்து குழந்தைகளுக்கு கொடுப்பார்கள். இதனால் குழந்தைகளுக்கு பசியின்மையோ, சின்னச் சின்ன தொற்றுநோய்களோ வராமல் தடுக்கப்படுகிறது. இதனாலேயே இது ‘பிள்ளை வளர்ப்பான்’ என்று கூறப்படுகிறது.

செரிமான ஆரோக்கியம்: பிறந்த குழந்தைக்கு செரிமான மண்டலம் போதுமான அளவு வளர்ச்சி பெறாது. படிப்படியாக வளர்ச்சி அடையும். இதனால் தாய்ப்பால் மட்டுமே குடித்தாலும் கூட குழந்தைக்கு அஜீரணக்கோளாறு ஏற்பட்டு வாந்தி எடுக்கிறார்கள். குழந்தைக்கு வசம்பு கொடுக்கும் போது வயிறு ஆரோக்கியம் மேம்படுகிறது.

வயிறு உப்புசம் குறைக்க: குழந்தைக்கு செரிமான பிரச்சனை இருப்பதால் வயிறு உப்புசம் பாதிப்பும் வருவதற்கான வாய்ப்பு அதிகம். வசம்பு கொடுக்கும் போது உப்புசம் குறைய தொடங்குகிறது.



சுவாச பிரச்சனைக்கு: சுவாச ஆரோக்கியத்துக்கு உதவும் மூலிகையில் வசம்பு ஒன்று. இந்த நறுமணத்தை உள்ளிழுப்பது சுவாச பாதைகளை அழிக்கும் நெரிசலிலிருந்து நிவாரணம் அளிக்கும். குழந்தைக்கு சளி இருமல் என்பது இயல்பாக அடிக்கடி வரும்.

குறிப்பாக கக்குவான் இருமல் போன்ற நிலையில் இந்த வசம்பு நல்ல மருந்தாக செயல்படும். குழந்தைக்கு காய்ச்சல் நிலையில் இது உடலுக்கு வெப்பத்தை அளிக்கிறது.

வயிற்றுப்புண் தடுக்க: வசம்புவில் இருக்கும் ஹெலிகோபாக்டர் பைலோரி என்னும் பாக்டீரியாவிலிருந்து வயிற்றின் உட்புறப் புறணியை பாதுகாத்து, இதன் சேதத்தை தடுக்கிறது. இரைப்பை சாறு சுரப்பை கட்டுப்படுத்துகிறது. இதனால் தாய்ப்பால் செரிமானம் ஆகி வயிற்றுப்புண் தடுக்கப்படுகிறது.

பிறந்த குழந்தையின் சருமத்துக்கு: வசம்பின் சக்தி வாய்ந்த அழற்சி எதிர்ப்பு பண்புகள் சரும நோய்த்தொற்றுகளை தடுக்க செய்கிறது. சருமத்தடிப்பு, சரும ஒவ்வாமை. கட்டிகளை தடுக்கும் தன்மை கொண்டது. குழந்தையின் மென்மையான சருமத்தில் தொற்றுகள் எளிதாக பரவும் அதை தடுக்க வசம்பு உதவும்.

குழந்தைக்கு பேச்சு வர: குழந்தைக்கு சீக்கிரம் பேச்சு வர வசம்பு கொடுக்கலாம். இந்த வசம்புவை நாக்கில் தடவினால் பேச்சுகோளாறுகள் வராமல் குழந்தைக்கு நன்மை பயக்கும்.

குழந்தையின் நரம்புகள் வலுவாக்க: மூளை மற்றும் நரம்பு மண்டலத்தை வலுவாக வைத்திருக்க வசம்பு உதவும். இது கால் – கை வலிப்பு போன்ற நரம்பியல் கோளாறுகளை நிர்வகிப்பதற்கு இது உதவும். அறிவாற்றல் செயல்பாடு மற்றும் நினைவகத்தை மேம்படுத்த வசம்பு உதவும். தகவல் தொடர்பு திறனை மேம்படுத்தும்.

வசம்பு இருமல் மற்றும் சளியை குணப்படுத்துகிறது. இது தசை தளர்த்தும் செயல்பாடு நுரையீரலின் காற்றுப்பாதையை தளர்த்த செய்கிறது.

வசம்பு மனபதட்டம், நினைவாற்றல் இழப்பு போன்றவற்றை எளிதாக்க செய்கிறது. நரம்பு மண்டலத்தில் அதன் நேர்மறையான தாக்கம் காரணமாக இது புத்துணர்ச்சியூட்டும் மூலிகையாக பார்க்கப்படுகிறது. பக்கவாதத்தை போக்கும் தன்மை கொண்டது.

வசம்பு பூச்சிகளை கட்டுப்படுத்தக்கூடியது. வீட்டு கழிப்பறை, குளியலறை, சமையல் அறைகளில் பூச்சியைக் கட்டுப்படுத்த இரவு 250 கிராம் தூவிவிட்டு காலையில் கழுவிவிட்டால் போதும்.

வசம்பை தூள் செய்து இரண்டு டீஸ்பூன் அளவு எடுத்து தேனில் கலந்து சாப்பிட்டால் எல்லா வகையான தொற்று நோய்களும் நீங்கி விடும்.

வசம்பை விஷம் அருந்தியவர்களுக்கு உடனேயே இரண்டு, மூன்று டீஸ்பூன் கொடுத்தால் விஷம் வெளியே வந்து விடும்.

பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவருக்கும் பசியைக் தூண்டவும், சோம்பலை நீக்கவும் வசம்பு பயன்படுகிறது.

நீரிழிவு, வயிற்றுப்போக்கு, மூச்சுக்குழாய் அழற்சி, தோல் பிரச்சனைகள், கட்டிகள், மனச்சோர்வு போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்க இவை பயன்படுத்தப்படுகிறது.

வசம்புவை அதிகமாக எடுத்துக்கொள்ள கூடாது. அதிகமாக சாப்பிடும்போது வாந்தியை உண்டாக்கக்கூடியது. எனவே, 350 மில்லி கிராமுக்கு மிகாமல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இங்கு கூறப்பட்டுள்ள வசம்பை உபயோகப்படுத்தி சுயசிகிச்சை மேற்கொள்ள விரும்பினால் சித்த மருத்துவரின் தகுந்த ஆலோசனையுடன் மேற்கொள்வது நல்லது.

**தேவன் நல்லது என்று கண்டார். ஆம், தேவன் படைத்ததெல்லாம் நன்றாகவே இருக்கிறது. நன்மைகளின் நாயகனுக்கு நன்றி.**



# வஞ்சிக்கும் சர்ப்பம்

**ஆதியாகமம் 1, 2ஆம் அதிகாரம் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. கர்த்தர் சகலவித மிருகங்களையும், சகலவிதப் பறவைகளையும் எதினால் உருவாக்கினார்?
2. கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் தந்திரமுள்ளதாயிருந்தது எது?
3. பொன்னும், பிதோலாகும், கோமேதகக் கல்லும் விளையும் தேசம் எது?
4. எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும் ஆற்றின் பெயர் என்ன?
5. அசீரியாவுக்குக் கிழக்கே ஓடும் ஆற்றின் பெயர் என்ன?
6. ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும் ஆற்றின் பெயர் என்ன?
7. தேவன் ஆதாமிடம் எந்த கனியை புசிக்க வேண்டாம் என்றார்?
8. சர்ப்பம் முதலில் யாரிடம் வந்து பேசியது?
9. தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஓடின நதி, எத்தனை ஆறுகளாக பிரிந்தது?
10. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் நீ புசிக்கும் நாளில் ................................ என்று தேவன் கட்டளையிட்டார்.

விடைகள் 9ஆம் பக்கம் பார்க்கவும்

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

(‘ஆதாம்’ என்பதற்கு ‘மண்ணால் ஆனவன்’ என்பது பொருள்.)

தேவன் உலகையும், முதல் மனிதன் ஆதாமையும் படைத்து அவனுக்கு ஒரு துணையையும் அளித்து ஏதேன் என்னும் தோட்டத்தையும் அவர்களுக்காய் அமைத்துக் கொடுத்தார். ஏதேன் தோட்டம் பூமியின் பரலோகமாக இருந்தது. அங்கே அனைத்து விதமான பழமரங்களும் இருந்தன.

தோட்டத்தில் நான்கு ஜீவ நதிகள் ஓடிக் கொண்டிருந்தன. ஆதாமும் அவனுடைய மனைவியும் ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்து வந்தார்கள். ஆதாம் தன்னுடைய மனைவியை ஏவாள் என்று பெயரிட்டழைத்தான். அவன் தான் பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் பெயரிட்டவன்.

தாலாட்டும் காற்றும், இனிமையான காட்சிகளும் நிறைந்திருந்த ஏதேன் தோட்டத்தில் அவர்களுக்கு எந்தக் குறையுமே இல்லை. தேவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமை தங்கவைத்தபோது ஒரே ஒரு கட்டளை மட்டும் இட்டிருந்தார். ‘இங்கிருக்கும் எல்லா மரங்களின் கனிகளும் உனக்கே.

ஆனால் தோட்டத்தின் நடுவே நிற்கும் மரத்தின் கனியை மட்டும் நீ உண்ணக்கூடாது’ என்பதே அந்தக் கட்டளை. ஆதாம் அந்தக் கட்டளையை தன் மனைவிக்கும் சொன்னான். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திற்குள் ஓடியாடி பழங்களை உண்டு மகிழ்ந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அந்த விலக்கப்பட்ட மரத்தின் கனியை மட்டும் உண்ணவே இல்லை.



ஒவ்வொரு முறை ஏவாள் அந்த மரத்தைக் கடக்கும்போதும் அவளுடைய உள்ளத்தில் ஓர் சலனம் உருவாகும். 'நான் ஏன் அந்த மரத்தின் கனியை மட்டும் உண்ணக்கூடாது? அப்படி அந்தக் கனிக்கு என்னதான் தனிச்சிறப்பு?' நாட்கள் கடந்துகொண்டே இருந்தன. ஏவாளின் மனதில் விலக்கப்பட்ட கனியின் மீதான விருப்பமும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

ஒரு நாள் ஆதாமும் ஏவாளும் வழக்கம் போல ஏதேன் தோட்டத்தின் எழிலை ரசித்தவாறே நடந்துகொண்டிருந்தனர். நடந்து நடந்து அந்த விலக்கப்பட்ட மரத்தின் அருகே வந்தார்கள். அந்த மரத்தில் சாத்தான் பாம்பின் (சர்ப்பம்) வடிவத்தில் அவர்களுக்காகக் காத்திருந்தான்.

ஏவாள் அந்த விலக்கப்பட்ட கனியின் மீது ஆசை வைத்திருப்பதை சாத்தான் அறிந்திருந்தான். சலனப்பட்ட மனசுக்குள் தானே எல்லாவிதமான சாத்தான்களும் குடியேறுகின்றன. ஒருவேளை ஆதாமிடம் தன்னுடைய சூழ்ச்சி பலிக்காது என்று சாத்தான் கருதியிருக்கக்கூடும்.

பாம்பு வடிவிலிருந்த அந்த சாத்தான் ஏவாளுடன் தன் சூழ்ச்சிப் பேச்சைத் துவங்கினான்.

'என்ன ஏவாள்.. சவுக்கியமா? ஏதேன் தோட்டத்தில் உங்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்கின்றனவா?'

'ஏதேன் தேவன் அமைத்த தோட்டமாம். அதனால் இங்கே எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை' ஏவாள் சொன்னாள்.

'இல்லை ஏவாள், உன்னுடைய முகத்தில் ஏதோ ஒரு ஏக்கம் இருக்கிறது. ஏதோ ஒரு குறையின் ரேகை உன் முகத்தில் தெரிகிறது. அது என்னவென்று சொல். நான் தீர்த்து வைக்கிறேன். நான் சகல சக்தியும் படைத்தவன். தேவனால் செய்ய முடிகின்ற காரியங்களை அனைத்தையும் என்னாலும் செய்ய முடியும்' சாத்தான் சொன்னான்.

'ஏக்கமா? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையே...' ஏவாள் மறுத்தாள்.

'சரி... சரி... இந்தா... ஒரு பழம் சாப்பிடு...' சாத்தான் விலக்கப்பட்டக் கனியைப் பறித்து ஏவாளிடம் நீட்டினான்.

'ஐயோ.. வேண்டாம். இந்த மரத்தின் கனியை மட்டும் உண்ணக்கூடாது என்று தேவன் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்' ஏவாள் சொன்னாள்.

'சாப்பிடக் கூடாது என்று சொன்னாரா? இந்தப் பழத்தையா? வேறென்ன சொன்னார்?' சாத்தான் அதிசயப்படுவது போல நடித்தான்.

'அந்த மரத்தின் கனி அழிவுக்கானதாம். அதை உண்டால் நாங்கள் அழிந்து போவோமாம்'

சாத்தான் சத்தமாகச் சிரித்தான். 'அறிவிலியாய் இருக்கிறாயே. அந்த மரத்தின் கனியை உண்டால் நீ சாகமாட்டாய். அதை உண்டால் உன்னுடைய அறிவுக் கண்கள் திறந்து கொள்ளும். அந்த மரத்தின் கனியை உண்பவர்கள் எல்லோரும் தேவர்களைப் போல ஆவார்கள்' சாத்தான் சொன்னான்.

'உண்மையாகவா?' ஏவாள் உற்சாகமாய்க் கேட்டாள்.

'ஆம்... தேவனுக்குப் பொறாமை. நீங்கள் தேவனைப் போல ஆகிவிட்டால் தேவனுடைய பணிகளையெல்லாம் நீங்களும் செய்யமுடியும். பின்பு தேவனுக்கு மரியாதை இருக்காது. உங்களுக்கு மிகப்பெரிய வல்லமை கிடைக்கும்' சாத்தான் ஆசை வார்த்தை கூறினான்.

‘அப்படியா…? உண்ணவேண்டும் என்னும் ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் உண்டால் செத்துவிடுவோமோ என்னும் பயமும் இருக்கிறது’ ஏவாள் இழுத்தாள்.

‘இன்னும் என்னுடைய வார்த்தைகளை நீ நம்பவில்லையா…’

‘இத்தனை சொன்னபின்னும் உனக்குச் சந்தேகமா? உண்ணுங்கள்.. நீங்கள் இருவரும் இதை உண்ணுங்கள். ஒன்றும் நேரிடாது. அந்த மரத்திலுள்ள பழம்தான் இந்த தோட்டத்துப் பழங்களிலேயே மிகவும் சுவையானது. மிகவும் அழகானது. இதை மட்டும் உண்டால் நீங்கள் தேவனைப் போல ஆவீர்கள். அதில் சந்தேகமேயில்லை’ சாத்தான் சொன்னான்.

அந்த மரத்திலுள்ள கனிகளைப் பார்க்கப் பார்க்க ஏவாளின் மனசுக்குள் தானும் ஒரு கனியை பறித்து உண்ணவேண்டும் என்னும் ஆசை கொழுந்துவிட்டு எரியத் துவங்கியது.

ஏவாள் ஒரு கனியை பறித்து சிறிது நேரம் கைகளில் வைத்திருந்தாள். பின் மெல்லக் கடித்தாள். ஒன்றும் நிகழவில்லை. ஏவாளுக்குத் தைரியம் வந்தது. அந்தப் பழத்தை முழுவதும் உண்டாள். அவளுக்கு அந்த சுவை மிகவும் பிடித்திருந்தது. அவளுடைய மனசுக்குள் பல நாட்களாக இருந்த ஆசை தணியத் துவங்கியது. அவள் ஆதாமைப் பார்த்தாள். ஆதாம் நடந்த அனைத்தையும் பார்த்துக் கொண்டே இருந்தான்.

ஏவாள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவளிடம் ‘வேண்டாம். தேவனின் கட்டளையை மீறாதே’ என்று அவன் எச்சரிக்கவில்லை. ஏனென்றால் ஒரு குடும்பத் தலைவனின் கடமைகள் என்னென்ன என்பதை ஆதாம் அறிந்திருக்கவில்லை. பழத்தை உண்ணாதே என்று சொன்ன தேவனும், ‘ஒரு நாள் சாத்தான் பாம்பு வடிவில் வந்து உன்னைச் சோதிப்பான். பழத்தை உண் என்பான். ஆனால் அந்த சோதனையில் விழுந்து விடாதே’ என்றும் சொல்லவில்லை. எனவே அந்த சூழ்நிலையில் ஆதாமின் கடமை என்ன என்பது ஆதாமுக்கே விளங்கவில்லை.

பழத்தை உண்ட ஏவாள் அதை ஆதாமுக்கும் கொடுத்தாள். ‘கவலைப்படாமல் உண்ணுங்கள். நான் உண்டேன் எனக்கு ஒன்றும் நேரவில்லை. இதுதான் நான் இதுவரை உண்ட கனிகளிலேயே சுவையானது. இனிமேல் இதை நான் தினமும் உண்ணலாம்’ ஏவாள் சொன்னாள். ஆதாம் ஏவாளின் பேச்சைக் கேட்டான். தேவனின் கட்டளையை மீறினான். கனியை உண்டான்.

இருவரும் விலக்கப்பட்ட கனியை உண்டு முடித்தனர். தன்னுடைய திட்டம் நிறைவேறியதை அருகிலிருந்து பார்த்த சந்தோஷத்தில் பாம்பு வடிவிலிருந்த சாத்தான் சிரித்துக் கொண்டே ஓடி மறைந்தான். கனியை உண்டு முடித்ததும் ஆதாமும், ஏவாளும் தாங்கள் நிர்வாணிகளாய் இருப்பதை முதன் முறையாக உணர்ந்தார்கள்.

அதுவரை அவர்களுக்குள் திறக்கப்படாமல் இருந்த அறிவுக்கண் திறந்தது. இருவரும் வெட்கப்பட்டார்கள். ஓடிச் சென்று அத்தி இலைகளைக் கோத்து ஆடையாய் அணிந்து கொண்டார்கள். நன்மை தீமை அறியும் மரம் என்று தேவன் காட்டிய மரம் அவர்களின் மழலைத் தன்மையை அழித்துவிட்டது.

தொடரும்…

6ஆம் பக்கத்தின் விடைகள்

## வஞ்சிக்கும் சர்ப்பம் – பதில்கள்

1. மண்ணினால், 2. சர்ப்பம், 3. ஆவிலா தேசம், 4. கீகோன், 5. இதெக்கேல், 6. பைசோன், 7. நன்மை தீமை அறியத்தக்க விருட்சம், 8. ஏவாளிடம், 9. நான்கு, 10. சாகவே சாவாய்

# வலுவான முதலை!



சங்கீதம் 74:14, எசேக்கியேல் 29:3, எசேக்கியேல் 32:2 ஆகிய வசனங்களில் முதலை என்ற வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது.

‘‘தேவரீர் உமது வல்லமையினால் சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து, ஜலத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தலைகளை உடைத்தீர். தேவரீர் முதலைகளின் தலைகளை நருக்கிப்போட்டு, அதை வனாந்தரத்து ஜனங்களுக்கு உணவாகக் கொடுத்தீர். ஊற்றையும் ஆற்றையும் பிளந்துவிட்டீர்; மகா நதிகளையும் வற்றிப்போகப்பண்ணினீர். பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது; தேவரீர் ஒளியையும் சூரியனையும் படைத்தீர். பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டம்பண்ணினீர்; கோடைகாலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினீர் (சங்கீதம் 74:13-17). இவ்வசனத்தில் பூர்வகால முதல் பூமியின் நடுவில் இரட்சிப்புகளைச் செய்துவருகிற தேவன் செய்த வல்லமையான செயல்களை காணலாம். இந்த மாதம் வலிமையுள்ள முதலையைக் குறித்து பார்க்கலாம்.

**முதலைகள்** (Crocodiles) பல்லி இனத்தைச் சார்ந்த ஊர்வன விலங்கு ஆகும். முதலைகள் crocodylidae குடும்பத்தையும், crocodilia என்ற வரிசையையும் சார்ந்ததாகும். இவை நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரினமான இருந்தாலும் பெரும்பாலும் நீரில் தான் இருக்கின்றன. இது ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களில் உள்ள ஆறுகளிலும் ஏரிகளிலும் உப்பு நீரிலும் வாழ்கின்றன.

முதலைக்கு இடங்கர், கடு, கரவு, கோதிகை, சிஞ்சுமாரம், மகரம், முசலி என்ற பல பெயர்கள் உண்டு. வழங்கியுள்ளன. ஆண் முதலையை கராம் அல்லது கரா என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

கருப்பு கெய்மன், அமெரிக்க முதலை, கரியல், உப்பு நீர் முதலை, நைல் முதலை போன்றவை பிரபலமான இனங்கள் ஆகும். உலகளவில் 23 வகை முதலைகள் இருக்கின்றன. முதலைகளில் உப்பு நீர் முதலைகள் (Crocodiles), நன்னீர் முதலைகள் (Alligators) என 2 வகைகள் உள்ளன. இரண்டுக்கும் இடையே சில வித்தியாசங்கள் உண்டு.

நன்னீர் முதலைகள் ஏரிகள், ஆறுகள் மற்றும் சதுப்பு நிலங்கள் போன்ற புதிய நல்ல நீர்நிலைகளில் மட்டுமே காணப்படுகின்றன. ஆனால் உலகிலேயே ஃப்ளோரிடாவில் மட்டும் நன்னீர் முதலைகளும், உப்புநீர் முதலைகளும் ஒரே இடத்தில் வசிக்கும். நன்னீர் முதலையின் கழுத்தில் ஒரு குறுகிய முகவாய் மற்றும் ஊசி போன்ற பற்கள் மற்றும் நான்கு பெரிய செதில்கள் உள்ளன. நன்னீர் முதலை 7 அடி நீளம் வரை வளரக்கூடியது. அவை பெரும்பாலும் ஆலிவ்-பச்சை மற்றும் பழுப்பு நிறத்தில் இருக்கும். அவைகள் பதுங்கியிருந்து வேட்டையாடுபவை. ஆனால் தூண்டப்பட்டால் தவிர மனிதர்களைத் தாக்க மாட்டார்கள். இவை இந்தியாவிலும் ஆஸ்திரேலியாவிலும் காணப்படுகின்றன. நன்னீர் முதலைகளின் வாய் மூடியிருக்கும். அவற்றின் மேற்புற பற்கள் மட்டும் வெளியில் தெரியும் வகையில் இருக்கும்.



உப்பு நீர் முதலைகள் கடற்கரைகள், முகத்துவாரங்கள், சதுப்பு நிலங்கள் போன்ற உப்பு நீர் நிலைகளில் காணப்படுகின்றன. உப்பு நீர் முதலை நீண்ட முகவாய் மற்றும் கழுத்தில் சில கவசத் தகடுகளைக் கொண்டுள்ளது. உப்பு நீர் முதலைகள்தான் முதலை இனங்களிலேயே உருவத்தில் பெரியது. உப்பு நீர் முதலை 19 அடி நீளம் வரை வளரக்கூடியது. உப்பு நீர் முதலைகள் பதுங்கியிருந்து வேட்டையாடுபவை, மேலும் அவை அதிக பிராந்திய மற்றும் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டவை என்பதால் அவை தூண்டப்படாவிட்டாலும் மனிதர்களைத் தாக்கும். இவை வடக்கு ஆஸ்திரேலியா, இந்தியாவின் கிழக்கு கடற்கரை மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளில் காணப்படுகின்றன. உப்பு நீர் முதலைகளுக்கு 'நிக்டிடேட்டிங் மெம்பிரேன்' எனப்படும் பாதுகாப்பு ஒளிஊடுருவக்கூடிய மூன்றாவது கண்ணிமை உள்ளது, இது கண் முழுவதும் பக்கவாட்டாக மூடுகிறது. இது அவர்களை ஒரே நேரத்தில் பார்க்கவும் நீந்தவும் அனுமதிக்கிறது. இளம் உப்பு நீர் முதலைகள் வெளிர் மஞ்சள் நிறத்தில் கறுப்பு கோடுகள் மற்றும் உடல் மற்றும் வால் மீது புள்ளிகள் உள்ளன. முதிர்ச்சியடைந்ததும் பழுப்பு அல்லது சாம்பல் நிறத்தில் இருக்கும். உடலின் கீழ் கோடுகள் இருக்கும். உப்பு நீர் முதலைகளின் வாய்ப்புறம் மூடியிருந்தாலும், மேல் மற்றும் கீழ்புறத்தின் பற்கள் தெரியும் வகையில் இருக்கும்.

முதலையின் இதயம் தனிச்சிறப்பு வாய்ந்தது. பொதுவாக ஊர்வன விலங்குகளுக்கு 3 இதய அறைகள் இருக்கும். ஆனால் முதலைக்கு 4 அறைகள் உள்ளன. முதலைகள் நீருக்குள் சுவாசிக்க காற்றை நுரையீரலில் சேமித்துக் கொள்ளும். தண்ணீருக்குள் தனது இரத்த ஓட்டத்தை குறைத்துக் கொள்வதன் மூலமாக தனது இதயத் துடிப்பை மெதுவாக துடிக்கச் செய்வதால் முதலையால் நீண்டநேரம் தண்ணீருக்குள் இருக்க முடிகிறது.

முதலைகளின் உடல் நீளமாகவும், தடித்த தோலுடனும் இருக்கும். முதலைகள் குளிர்ந்த இரத்தம் கொண்டவை. முதலைக்கு வியர்வை சுரப்பிகள் கிடையாது. எனவே முதலை வாயைத் திறப்பதன் மூலம் வெப்பத்தை வெளியேற்றுகிறது.

முதலை நான்கு கால்களையும் வலுவான வாலினையும் கொண்டது. முதலைகள் நீரில் நீந்துவதற்கு ஏதுவாக தனது கால்களை மடக்கி வாலை இடப்புறமாகவும், வலப்புறமாகவும் அசைத்து நீந்துகின்றன. சில சமயங்களில் கால்களை துடுப்பு போல சட்டெனத் திரும்புவதற்கு உபயோகித்து தண்ணீரில் வெகு வேகமாக நீந்துகின்றன. அவை மணிக்கு 40 கிலோ மீட்டர் வரை வேகமாக நீந்த முடியும். சுமார் ஒரு மணிநேரம் வரை மூச்சைப் பிடித்துக்கொண்டு தண்ணீருக்குள் இருக்க முதலைகளால் முடியும்.

முகத்தின் முன் முனையில் இரண்டு மூக்குத் துளைகள் இருக்கும். இத்துளைகளில் உள்ள வால்வு போன்ற மடிப்புகள் சுவாசக் குழாயில் நீர் உட்புகாதவாறு மூடிக்கொள்ளும். முதலையின் மோப்பத் திறன் மிக அதிகம். முதலையின் ஒரு மூக்குத் துளை வாசனையை நன்கு அறியவும், மற்றொரு துளை சுவாசிக்கவும் பயன்படுகிறது.

முதலைகளின் கண்கள் மற்றும் நாசி துவாரங்கள் தலையின் மேல் அமைந்திருப்பதால், நீருக்கு அடியில் மூழ்கியிருக்கும்போது சுவாசிக்கவும் பார்க்கவும் முடியும். முதலையின் பார்வை சக்தி கூர்மையானது. சதுப்புநில முதலை 300 அடிக்கு அப்பாலுள்ள இரையைக்கூட கண்டுபிடிக்கும் திறன் கொண்டது. முதலைகளுக்கு செவித்திறன் மிகவும் கூர்மையானது. தண்ணீரில் மூழ்கியிருக்கும்போதும் கூட முதலையால் ஒலியைத் துல்லியமாகக் கேட்க முடியும். முதலைகள் மிக வேகமாக நீச்சல் அடிக்கும். இது தன் இரையை பிடிக்க உதவுகிறது. முதலைகள் 32 கி.மீ. வரை நீந்தக்கூடியது. முதலை ஒரு மணி நேரம் நீருக்கடியில் சுவாசத்தை அடக்க முடியும். நிலத்தில், முதலைகள் வேகமாக பயணிக்காது. தண்ணீரில் அதன் பலம் அதிகம். முதலையால் 17.6 கி.மீ. மட்டுமே இயங்க முடியும்.

பிற உயிரினங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு முதலைக்கு உண்டு. மற்ற உயிரினங்களுக்கு மேல் தாடை அசையாது. ஆனால் கீழ் தாடை அசையும். இதற்கு மாறாக முதலைகளுக்கு கீழ்தாடை அசையாது. ஆனால் மேல்தாடை அசையும். அவை இரையை வேட்டையாடுவதற்காக வலுவான தாடைகளையும், கூர்மையான பற்களையும் பெற்றுள்ளன. முதலைகளுக்கு சராசரியாக 60 பற்கள் இருக்கும். அவற்றின் பற்கள் விழவிழ முளைத்துக்கொண்டே இருக்கும். முதலை இரையை மெல்வதில்லை. பிடித்து பற்களால் நொறுக்கி தின்னவே இவற்றை பயன்படுத்துகின்றன. ஒரு முதலையின் வாழ்நாளில் 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் பற்கள் வளரும். காரணம், அடிக்கடி கடிப்பதால் அதன் பற்கள் உடைந்து உள்ளிருந்து வளர்ந்து கொண்டே இருக்கும்.

முதலைகளின் பிரதான உணவு மீன். தவிர, தவளை, நண்டு வகைகள், ஆமைகள், பறவைகள், மான், குரங்கு, நாய், எருமை மற்றும் சிறு பாலூட்டிகளையும் உண்ணும். மிருகக்காட்சி சாலையில் வளர்க்கப்படும் முதலைகள் ஏற்கனவே கொல்லப்பட்ட சிறிய விலங்குகளான எலிகள், மீன், வெட்டுக்கிளி போன்றவற்றை சாப்பிடுகின்றன. காடுகளில் உள்ள முதலைகள் இரையை தங்கள் பெரிய தாடைகளால் இறுகப் பிடித்து, அதை நசுக்கி, பின்னர் இரையை முழுவதுமாக விழுங்கும். மற்ற விலங்குகளைப் போல சிறிய உணவுகளை மெல்லவோ அல்லது கடிக்கவோ முடியாது. முதலைகள் வயிற்றில் உணவை அரைக்க சிறிய கற்களை விழுங்குகின்றன. முதலைகளின் ஜீரண சக்தி அபாரமானதாகும். இவற்றின் ஜீரண உறுப்பில் சுரக்கும் அமிலங்கள், எலும்பு, கல் போன்ற கடினமான பொருட்களையும் கூட கரைக்கவல்லது. முதலைகள் பல மாதங்கள் உணவு இல்லாமல் வாழ முடியும். முதலைகள் 70-100 ஆண்டுகள் வரை வாழ்கின்றன.

முதலைகள் தண்ணீருக்கு அடியில் உள்ள நிலத்தில் முட்டையிடுகின்றன. சதுப்பு நில முதலை மண்ணில் குழிதோண்டி முட்டைகளைப் புதைக்கின்றன. உப்புநீர் முதலை இலை மற்றும் மண்ணால் கூடுகட்டி முட்டையிடுகின்றன. முதலைகள் ஒரே நேரத்தில் 10 முதல் 60 முட்டைகள் வரை இடுகின்றன. குஞ்சுகள் 55 முதல் 110 நாட்கள் வரை தங்கள் முட்டைகளில் இருக்கும். அவை பிறக்கும் போது 7 முதல் 10 அங்குலம் வரை இருக்கும். அவை 4 வயது முதல் 15 வயது வரை முதிர்ச்சியடையாது. 99 சதவீத முதலைக் குட்டிகள் பிறந்து ஓராண்டுக்குள்ளாகவே பெரிய மீன்களாலும், நாரைகளாலும் உண்ணப்பட்டுவிடுகின்றன.

ஈரநிலங்களில் துவாரங்களை அமைத்து, வறட்சி காலங்களில் அதில் தண்ணீர் கிடைக்க வழி செய்கின்றன. இதனால், மற்ற நீர்வாழ் உயிரினங்களான மீன்கள், ஆமைகள் மற்றும் மற்ற விலங்குகள் வாழ்வதற்கு வழிவகுக்கின்றன. முதலைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

வாழ்விடங்கள் அழிவு, மாசு, காலநிலை மாற்றம் போன்ற காரணங்களால் அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றன. முதலைகளுக்கு மனிதர்களும் பெரிய அச்சுறுத்தல்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். முதலைகள் பல்லாண்டு காலமாக அவற்றின் தோலுக்காகவும் மேலும் அதன் உடலில் இருந்து கிடைக்கும் பல்வேறு பொருளுக்காகவும் தொடர்ந்து வேட்டையாடப்பட்டு வருகின்றன. மேலும் ஆஸ்திரேலியா, எத்தியோப்பியா, தாய்லாந்து, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் முதலைகள் தோலுக்காகவும், அதன் உடலில் இருந்து கிடைக்கும் பல்வேறு பொருட்களுக்காகவும் உணவிற்காகவும் வேட்டையாடப்படுகின்றன. கியூபாவில் முதலைகள் ஊறுகாய் வடிவில் உட்கொள்ளப்படுகின்றன.

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

தன் குட்டியிடம் செல்வதற்கு முதலைக்கு சரியான வழிகாட்டுங்கள் குழந்தைகளே.



# வேதமே வெளிச்சம்


உன் விசுவாசம் பெரிது;
நீ விரும்புகிறபடி
உனக்கு ஆகக்கடவது.
மத்தேயு 15:28
God bless you


உன் கை செய்யும்
வேலையிலெல்லாம்
உன் தேவனாகிய கர்த்தர்
உன்னை ஆசீர்வதிப்பார்.
உபாகமம் 14:29
God bless you


உன் தேவனாகிய கர்த்தர்
பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும்
உன்னை மேன்மையாக வைப்பார்.
உபாகமம் 28:1
God bless you


கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.
எனக்கு விரோதமாகச் சுற்றிலும்
படையெடுத்து வருகிற
பதினாயிரம்பேருக்கும்
நான் பயப்படேன்.
சங்கீதம் 3:5,6
God bless you




# என்ன என்னென்ன

இறுதி நாளின்
அறிகுறிகளென்ன ஆண்டவரே ?
சீடர்கள் தூவிய கேள்விக்கு
தூயவர் பதில் சொன்னார்.

என் பெயரைச் சொல்லி,
நான் தான் மேசியா என்று
ஈசல் கூட்டங்கள்
எழும்பி அலையும்.

போர் முழக்கங்களையும்,
மரணத்துக்கான பறையடியையும்
கேட்டு
கலங்கவேண்டாம்.
நிகழவேண்டிய நிஜங்கள் இவை.

இது முடிவின் துவக்கம் மட்டுமே.
முடிவின் முற்றுப்புள்ளி அல்ல.

நாடுகள் தாகம் கொண்டு
சக நாடுகளை அழிக்க எழும்பும்.

அரசர்கள் வெறிகொண்டு
சக உயிர்கள் மீது
ஆயுதங்களை சோதித்துப் பார்ப்பர்.

நோய்களும் பஞ்சங்களும்
உயிர் குடித்து வியர்த்துக் கிடக்கும்.

மக்கள் உங்களை
வேதனைக்கு விற்று விடுவார்கள்,
கொலைக் கயிறுகள்
உங்களுக்கு பரிசாக விழும்.

என்னை நேசிப்போரை
மக்கள் வெறுப்பார்கள்.
மக்கள் பலர்
இடறி வீழ்ந்து
மீட்பின் மைந்தனை மறுதலிப்பர்.

ஒருவன் விரல்
இன்னொருவன் நெஞ்சுக்கு நேராய்
உயிர்க்கொல்லியாய்
உருமாறி நீளும்.

அக்கிரமங்களின் அணிகலன்களே
அகிலம் முழுதும் அணியப்படும்.

உலகம் முழுதும்
விண்ணரசின் போதனை
விதைத்த பின்னரே
இறுதி காலம் இறங்கிவரும்.

இறுதிவரை
உறுதிகொள்பவன்
பேறுபெற்றவன்.

# கனி கொடுங்கள்

இயேசு தம்முடைய போதனைகள் மக்களைச் சென்றடைவதற்காகவும், மக்களுக்கு அவை மறந்துவிடாமல் இருப்பதற்காகவும் உவமைகள் வழியாகப் போதிப்பது வழக்கம். அவற்றில் சிறப்பிடம் பெற்ற ஒன்று விதைப்பவன் உவமை.

விதைப்பவன் ஒருவன் விதைப்பதற்குரிய விதைகளைக் கூடையில் எடுத்துக் கொண்டு வயலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

சில விதைகள் அவனுடைய கூடையிலிருந்து நழுவி வழியோரத்தில் விழுந்தன. அந்த விதைகள் முளைப்பதற்கு முன்பாகவே வானத்துப் பறவைகள் வந்து அவற்றைத் தின்றுவிட்டன.

இன்னும் சில விதைகள் பாறைநிலத்தில் விழுந்தன. மண்பிடிப்பு இல்லாத பாறைநிலத்தில் விதைகள் விரைவிலேயே முளைத்துவிட்டன. ஆனால் நிலத்தில் வேர் பிடிக்கவில்லை. சூரியன் வந்தபோது அதன் வெப்பத்தைத் தாங்க முடியாத அந்த முளைகள் எல்லாம் வெயிலில் காய்ந்து போய்விட்டன.

சில விதைகள் முட்செடிகளிடையே விழுந்தன. அவை முட்செடிகளிடையே விழுந்ததால் பறவைகளால் அவற்றை நெருங்க முடியவில்லை. அவை நிலத்தில் வேர்விட்டு முளைத்தன. நிலத்தில் வேரூன்றி விட்டதால் அவற்றைக் கதிரவனாலும் கருக வைக்க முடியவில்லை. ஆனால் வளர, வளர தன்னைச் சுற்றி நின்ற முட்செடிகளாலேயே அவை நெரிக்கப்பட்டு பலன் தராமல் போயின.

சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் மண்ணில் புதைபட்டதால் பறவைகளின் அலகுகளுக்குத் தப்பின, வளர்வதற்குத் தேவையான நீர் இருந்ததால் அவற்றைச் சூரியனின் கதிர்கள் சுட்டெரிக்கவில்லை. நிலம் விவசாயத்துக்குத் தயாராக இருந்ததால் முட்செடிகள் எங்கும் இல்லை. எனவே அந்த விதைகள் நன்றாக முளைத்து வளர்ந்தன. அவற்றில் சில முப்பது மடங்காகவும், சில அறுபது மடங்காகவும், சில நூறு மடங்காகவும் பலனளித்தன.

காதுள்ளவன் கேட்கட்டும்!



இயேசு உவமையைச் சொல்லி நிறுத்தினார். மக்கள் புரியாத முகங்களோடு பொறுமையாய் இருந்தார்கள். இயேசு அவர்களுக்குத் தன்னுடைய உவமைக்குள் மறைந்திருந்த பொருளை விளக்கத் துவங்கினார்.

வழியோரத்தில் விழுந்த விதைகளைப் போன்றவர்கள் இறையரசைக் குறித்த வார்த்தைகளைக் கேட்பார்கள் ஆனால் புரிந்து கொள்ளமாட்டார்கள். அவர்கள் காதுகளில் விழுந்த வார்த்தைகளை தீயவன் வந்து கவர்ந்து சென்று விடுவான். அது அவனுடைய உள்ளத்துக்குள் செல்லாது.

பாறை நிலத்தில் விழுந்தவர்கள் இறைவார்த்தையை மிகவும் மகிழ்வுடன் கேட்டு உள்ளுக்குள் முளை விடுவார்கள். ஆனால் சிறிது நாட்களிலேயே ஏதேனும் சோதனைகளோ, எதிர்ப்புகளோ வரும்போது எதிர்த்து நிற்கும் வலு இல்லாததனால் வார்த்தைகளை இறக்க விடுவார்கள்.

முட்செடிகளின் நடுவே விழுந்த விதையைப் போன்றவர்கள், இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும் என்று முடிவெடுத்து நல்ல முறையில் நடக்கத் துவங்குவார்கள். ஆனால் உலகக் கவலைகள், பணம் சேர்க்கும் ஆசை, சிற்றின்ப மோகம் இவற்றால் நெரிக்கப்பட்டு பலனளிக்காமல் போவார்கள்.

நல்ல நிலத்தில் விழுந்தவிதையைப் போன்றோர், இறை வார்த்தையைக் கேட்கும் முன்பாகவே தங்கள் மனதை அதற்கேற்பத் தயாரித்துக் கொள்வார்கள். பின் இறைவார்த்தையைக் கேட்டதும் அதை உள்வாங்கிக் கொள்வார்கள். அது உள்ளேயே முளைத்து, வளரும் போது அதற்குரிய நல்ல எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் வளர்த்துக் கொள்வார்கள். அவர்களை உலகக்கவலைகளோ, சிற்றின்ப மோகங்களோ, எதிர்ப்பாளர்களின் போலிக் கூச்சல்களோ பின் வாங்க வைக்காது. அவர்கள் நிலைத்திருந்து செயல்களில் இறைவார்த்தையை வெளிப்படுத்துவார்கள். சிலர் முப்பது மடங்கு, சிலர் அறுபது மடங்கு, சிலர் நூறு மடங்கு என பயன் தருவார்கள்.

இதுவே அந்த உவமையின் விளக்கம். இயேசு சொல்ல, மக்கள் அனைவரும் தெளிவடைந்தார்கள்.

‘இதை நேரடியாகச் சொல்லலாமே... ஏன் உவமைகள்?’ சீடர்கள் கேட்டனர்.

‘பரலோக ராஜ்யத்தின் மறைபொருளை நீங்கள் அறிகிறீர்கள். ஆனால் பொது மக்கள் அறிவதில்லை. அவர்களுக்காகவே இவ்வாறு சொல்கிறேன்...’ இயேசு சொன்னார்.

‘இன்னோர் உவமையும் சொல்கிறேன் கேளுங்கள்...’ இயேசு ஆரம்பித்தார்.

ஒருவன் வயலில் நல்ல விதைகளை விதைத்தான். ஆனால் அவன் தூங்கும் போது பகைவன் வந்து அவனுடைய வயலில் களைகளையும் விதைத்து விட்டுப் போனான். முளைத்து வருகையில் களையும் பயிரும் வித்தியாசம் காட்டவில்லை. வளர வளர களைகள் தங்கள் சுய முகத்தைக் காட்டத் துவங்கின. பயிர்களோடு பயிர்களாக களைகள் வளர்ந்து பயிர்களின் சத்தையும் உறிஞ்சிக் கொண்டிருப்பதை வேலையாள் கண்டு எஜமானிடம் வந்தான்.

‘ஐயா... நீர் உமது வயலில் நல்ல விதைகளையல்லவா விதைத்தீர். களைகள் வந்திருக்கின்றனவே. நான் போய் களைகளை வெட்டி விடவா?’

‘வேண்டாம். நீ களைகளைப் பிடுங்குகையில் பயிரையும் கூட அழித்துவிடக்கூடும். அறுவடைக்காலம் வரை இரண்டுமே வளரட்டும். அறுவடை செய்யும்போது பயிர்களைத் தனியாகவும், களைகளைத் தனியாகவும் கட்டு. பயிர்களை என்னுடைய களஞ்சியத்துக்கு அனுப்பி வை. களைகளையோ அழியா நெருப்பில் சுட்டெரி’ தலைவன் ஆணையிட்டான்.


உவமை சொல்லி முடித்த இயேசு மக்களைப் பார்த்தார்.

‘உங்களிடையே நல்ல பயிர்களும், களைகளும் உண்டு. களைகளாக வாழ்வோருக்கு இறுதி நாளில் அழிவு நிச்சயம். பயிர்களாக வாழுங்கள்’ என்றார்.

மக்களுக்குப் புரியும் விதத்தில் உவமைகள் மூலம் செய்திகளை விளங்க வைத்த இயேசுவின் திறமையை மக்கள் வெகுவாகப் புகழ்ந்தார்கள்.

# பெரிய முதலை!

முதலையின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# தன்னம்பிக்கை

பதின்வயதினரின் தன்னம்பிக்கை உடைந்து போக சின்னச் சின்ன விஷயங்களே போதுமானது! நண்பர்கள் மத்தியில் பாப்புலராய் இருப்பது பதின் வயதினருக்கு இனிமை தரும் சமாச்சாரம். அந்த பாப்புலாரிடி இல்லாமல் போகும் போது கூட அவர்களுடைய தன்னம்பிக்கை சிதைந்து போய் விடுகிறதாம். ஃபேஸ் புக்கில் நிறைய நண்பர்கள் சேரவில்லை என்றாலே கவலைப்பட்டு அப்செட் ஆகி விடும் இளம் பெண்கள் இருக்கிறார்கள்.

எட்டு, ஒன்பது வயதுகளில் பெண்களிடம் தன்னம்பிக்கை அபரிமிதமாக இருக்கும் என்கின்றன பல்வேறு ஆய்வு முடிவுகள். அதே பெண்கள் சில ஆண்டுகள் கழிந்து பதின் வயதுக்குள் நுழையும்போதோ தன்னம்பிக்கை ஆட்டம் காண ஆரம்பித்து விடுகிறது. இதற்கு அவர்களுடைய உடல் மாற்றங்களும் ஒரு முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

பெரியவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய தன்னம்பிக்கையை அவர்களே தான் கட்டி எழுப்ப வேண்டும். பதின் வயதுப் பெண்களுக்கோ, பெற்றோர், நண்பர்கள், உடன்பிறந்தோர் ஆகியோருடைய உதவியும் வெகுவாகத் தேவைப்படுகிறது. அதற்காக அட்வைஸ் மழையை அவிழ்த்து விடவும் முடியாது. காரணம் பதின் வயதுப் பெண்களுக்கு அட்வைஸ் என்பது உலக மகா அலர்ஜி. எனவே சொல்ல வேண்டியதை அவர்களுடைய பாணியில், அவர்களுடைய மொழியில் நாசூக்காகச் சொல்ல வேண்டும்.

குறிப்பாகப் பெற்றோர் தங்கள் பதின் வயதுப் பிள்ளைகளிடம் நதியில் மிதக்கும் படகைப் போல மிதந்து வாழ்வைப் புரிய வைக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் செய்யும் அனைத்தையும் நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. ஆனால் புரிந்து கொள்ள முயலுங்கள். உங்கள் பதின்ம (Teen) வயதில்



நீங்கள் எப்படி இருந்தீர்கள் என நினைவு வருகிறதா? பெரும்பாலும் தனிமையிலும், குழப்பத்திலும் கழிந்திருக்கத் தானே வாய்ப்பு அதிகம். அதே உணர்வுகள் உங்கள் பிள்ளைகளுக்கும் இருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் பிள்ளைகளை ஏதாவது ஒரு நல்ல பொழுதுபோக்கில் ஈடுபட வையுங்கள். அது அவர்களுக்கு ரொம்பப் பிடித்ததாக இருக்க வேண்டியது அவசியம். உங்களுக்குப் பிடித்ததை அவர்களிடம் திணிக்காதீர்கள். அது அவர்களுக்கு ஹாபியாய் இருக்காது! வேலையாய் மாறிப் போய்விடும். அதே போல சமூகக் குழுக்கள், பள்ளிக் குழுக்கள், ஆலயக் குழுக்கள் போன்றவற்றில் ஈடுபட வையுங்கள். அவர்களுடைய தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்ப இவையெல்லாம் உதவும்.

எந்தக் காரணம் கொண்டும் பதின்ம வயதினரை இளக்காரமாய்ப் பேசாதீர்கள். அவர்களுடைய நடை உடை பாவனைகளைக் கிண்டலடிக்கவே அடிக்காதீர்கள். குறிப்பாக பிறருக்கு முன்னால் வைத்து அப்படி ஒரு சிந்தனையே உங்களுக்கு வர வேண்டாம். அவர்களுடைய தன்னம்பிக்கையின் வேர்களில் அது கோடரியாய் விழும்.

உங்கள் பிள்ளைகள் தவறான வழியில் செல்கிறார்கள் எனில் அவர்களுக்கு சரியான பாதையைக் காட்ட வேண்டியது உங்கள் கடமை. அதில் இரண்டு வகை உண்டு. ''நீங்கள் செய்வது தவறு'' என்று தவறைச் சுட்டிக்காட்டுவது ஒரு வகை, எது சரியானது என வழிகாட்டுவது இன்னொரு வகை. நீங்கள் இரண்டாவது வகையைத் தேர்ந்தெடுப்பது நல்லது என்கின்றனர் உளவியலார்கள்.

உங்கள் பிள்ளைகளிடம் நிறைய நேரம் செலவிடுங்கள். பெரும்பாலான பெற்றோர் செய்கின்ற மிகப்பெரிய தவறு பிள்ளைகள் வளர்ந்து விட்டால் தனியே விட்டு விடுவது. இது பெற்றோர் குழந்தைகளிடையே பெரிய இடைவெளியை உருவாக்கி விடும். பதின்ம வயதினருக்கு அது மிகுந்த மன உளைச்சலைத் தரும். எனவே உங்கள் பிள்ளைகளுடன் போதுமான நேரம் செலவிட வேண்டும் என்பதில் உறுதியாய் இருங்கள். அது அவளுடைய பாதுகாப்பு உணர்வை அதிகரிக்கும். அந்தப் பாதுகாப்பு உணர்வே அவளுடைய தன்னம்பிக்கையைக் கட்டி எழுப்பும்.

உங்கள் மகளுடைய ஆரோக்கியத்தில் கவனமாய் இருங்கள். உடற்பயிற்சி செய்ய ஊக்கப்படுத்துங்கள். சரியான உடற்பயிற்சி உங்கள் மகளுடைய தன்னம்பிக்கையை வளர்க்கும். அவளுடைய மன அழுத்தம், தடுமாற்றம் போன்ற பல விஷயங்கள் மறையும். ஏழைகளுக்கு உதவுவது, நேர்மையாய் இருப்பது, நல்ல கல்வி, ஆரோக்கியமான உணவுப் பழக்கம் போன்ற விஷயங்களிலெல்லாம் உங்கள் மகளை ஈடுபடுத்துங்கள். இவையெல்லாம் உங்கள் மகளை தன்னம்பிக்கையில் வளர்த்தெடுக்கும் விஷயங்கள்.

பாராட்டுங்கள். உங்கள் மகளின் சின்னச் சின்ன நல்ல விஷயங்களுக்கெல்லாம் அவளைப் பாராட்டுங்கள். அவளுக்குத் தன்னம்பிக்கை தரக்கூடிய எந்த விஷயத்தையும் பாராட்டத் தயங்காதீர்கள். ஒருவேளை உங்கள் மகள் குண்டாய் இருப்பதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், அவளுடைய தோற்றம் அழகாக இருக்கிறது என பாராட்டுங்கள்!

முக்கியமாக பதின் வயதுப் பெண்கள் தன்னைப் பற்றி அறிந்து கொண்டிருப்பதும், தங்களால் எதையும் செய்ய முடியும் என ஆழமாய் நம்புவதும், சமூகத்தின் எதிர்பார்ப்புகளின் எல்லைகளில் உலாவ முடியும் எனும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியதும் அவசியம். பதின் வயதினரின் தன்னம்பிக்கையைக் கட்டி எழுப்புவது வலுவான ஒரு இளைய சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்குச் சமம்.

பதின் வயதை உரமூட்டுவோம். எதிர் காலத்தை நிறமூட்டுவோம்.


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். (1தீமோத்தேயு 5:17)




தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். (2 கொரிந்தியர் 9:15)




உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும்,
நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!
(சங்கீதம் 31:19)




இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும்,
வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.
ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது;
அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். (மத்தேயு 7:13,14)

# விசுவாசம்

கப்பர்நகூம் என்னும் ஊரில் படைத்தளபதி ஒருவர் இருந்தார். அவருக்குக் கீழே நூறு வீரர்கள் இருந்ததால் அவர் நூற்றுக்கு அதிபதி என்று அழைக்கப்பட்டார். அந்நாட்களில் நூறுபேர், ஐம்பது பேர், பத்து பேர், ஆயிரம் பேர் என்று பல அளவுகளில் படைகள் இருந்தன. படைவீரர்களின் எண்ணிக்கையை வைத்து குழுக்கள் பெயரிட்டு அழைக்கப்பட்டன. இந்த தலைவன் தன்னுடைய படைவீரர்களை மிகவும் நேசித்தான். அவர்களுடைய தேவைகளை எல்லாம் நிறைவேற்றி வைக்கும் நல்ல மனதுடையவனாக இருந்தான்.

ஒருமுறை அவனுடைய வேலைக்காரன் ஒருவன் நோயுற்றுச் சாகும் நிலையில் இருந்தான். தன்னுடைய வேலைக்காரனின் நிலையைக் கண்ட தலைவன் மிகவும் மன வருத்தமடைந்தான். அவனை எந்த வழியிலாவது சுகப்படுத்த முடியுமா என்று எல்லா வைத்தியர்களையும், போதகர்களையும் வைத்து முயன்றான். எந்த பயனும் இல்லை. வேலைக்காரன் நாளுக்கு நாள் பலவீனமடைந்து மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். இயேசு மக்களுக்குப் போதனைகள் நிகழ்த்துவதற்காக கப்பர்நகூமுக்கு வந்தார்.

இயேசு வந்திருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட நூற்றுக்கு அதிபதி மகிழ்ந்தான். இயேசுவைப் பற்றி அவன் மிகவும் நன்றாக அறிந்திருந்தான். இயேசுவின் அற்புதங்களின் மேல் அவர் ஆழமான விசுவாசம் கொண்டிருந்தார். இயேசு நினைத்தால் நிச்சயமாக தன்னுடைய வேலைக்காரனின் நோய் நீங்கிவிடும் என்று அவர் உறுதியாக நம்பினார்.

அவருக்குள் காய்ந்து போயிருந்த நம்பிக்கை மரம் மெல்ல மெல்ல துளிர் விட ஆரம்பித்தது. அவர் யூதருடைய மூப்பர்கள் சிலரை அழைத்து ‘ஐயா.. நீங்கள் எனக்காக இயேசுவிடம் சென்று என்னுடைய வேலைக்காரனுக்கு நலம் பெற்றுத் தாருங்கள்’ என்று வேண்டினார்.

அந்தப் பெரியவர்கள் நூற்றுக்கு அதிபதியையும் வேலைக்காரன் மேல் அவன் காட்டும் கரிசனையையும் ஏற்கனவே அறிந்திருந்தார்கள். யூதர்களுக்கென்று ஒரு ஜெப ஆலயத்தையும் அவன் அமைத்துக் கொடுத்திருந்தான். எனவே அவர்கள் அந்த நூற்றுக்கு அதிபதி மேல் மிகவும் மரியாதை வைத்திருந்தார்கள். அவர்கள் இயேசுவைக் காணச் சென்றார்கள். இயேசு மக்கள் கூட்டத்தினரிடம் பேசிக் கொண்டிருந்தார்.

‘நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் அதைச் செயல்படுத்த வேண்டும். நம்பிக்கை இல்லாமல் வெறுமனே கேட்டு விட்டு உங்களுக்குத் தோன்றும் வழியில் நடப்பது பயன் தராது. என்னை நோக்கி ஆண்டவரே ஆண்டவரே என்று சொல்வது முக்கியமல்ல. நான் சொல்வதன்படி நடப்பதே முக்கியம். என்னை நம்பி என்னுடைய போதனைகளின்படி நடப்பவன் கல்மலையின் மீது தன்னுடைய வீட்டைக் கட்டிய புத்தியுள்ள மனிதனுக்கு ஒப்பாவான். பெரும்புயலடித்தது, பெரும் சுழல்காற்று வீசியது. ஆனால் வீடு அசையவில்லை. என்னுடைய வார்த்தையின்படி நடக்காதவனோ, மணலின் மீது வீடு கட்டிய புத்தியில்லாத



மனிதனுக்கு ஒப்பாவான். சிறு புயலுக்கே அது சிதறடிக்கப்பட்டது. எனவே ஆழமான நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும். அந்த நம்பிக்கையை நீங்கள் செயல்களில் வெளிப்படுத்த வேண்டும்' இயேசுவின் போதனையைக் கேட்டுக் கொண்டிருந்தது மக்கள் கூட்டம். இயேசு போதனைகளை நிறுத்தியதும், யூதருடைய மூப்பர்கள் அவரிடம் சென்றார்கள்.

'போதகரே வணக்கம்' இயேசு அவர்கள் பக்கம் திரும்பினார்.

'இங்கே நூற்றுக்கு அதிபதி ஒருவர் இருக்கிறார். அவருடைய வேலைக்காரன் ஒருவன் சாகும் தருவாயில் இருக்கிறான். எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் அவனுக்குச் சுகம் கிடைக்கவில்லை. நீர் நினைத்தால் அவன் சுகம் பெறுவான் என்பது எங்களின் நம்பிக்கை' அவர்கள் அமைதியாய்ச் சொன்னார்கள். 'அவர் மிகவும் நேர்மையானவர். நமக்காக ஜெப ஆலயங்கள் எல்லாம் அமைத்துத் தந்தவர். நீங்கள் அவருக்கு உதவ வேண்டும்' அவர்கள் மீண்டும் பணிவுடன் சொன்னார்கள்.

'சரி வாருங்கள் அவரிடம் செல்வோம்' இயேசு அவர்களுடன் அந்த நோயாளியைச் சந்திக்கச் சென்றார். இயேசுவும் கூட்டத்தினரும் நூற்றுக்கு அதிபதியின் வீட்டை நெருங்கினார்கள். இயேசு தன் வீட்டை நோக்கி வந்திருப்பதைக் கண்ட நூற்றுக்கு அதிபதி பரவசமடைந்தான். அவன் தன் சிநேகிதரை அழைத்து நீங்கள் இயேசுவிடம் போய்,

'ஐயா... உமக்குத் தொந்தரவு வேண்டாம். நீர் என் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்க நான் பாத்திரன் அல்ல. ஆனால் ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொன்னால் போதும். என்னுடைய வேலைக்காரன் நலமடைவான். நான் அதிகாரத்துக்கு கட்டுப்பட்டவன் ஆனாலும் எனக்குக் கீழேயும் சேவகருமுண்டு. ஒருவனைப் பார்த்து போ என்றால் போவான், இன்னொருவனைப் பார்த்து வா என்றால் வருவான், இதைச் செய் என்றால் செய்வான். அதுபோல நீர் ஒரு வார்த்தை சொன்னால் போதும் நோய்கள் எல்லாம் என் வேலைக்காரனை விட்டு விட்டு ஓடிப்போய்விடும்' என்று சொல்லுங்கள் என்றான்.

அவன் சிநேகிதர்கள் இயேசுவை எதிர்கொண்டு போய் அவர் சொன்னதை அப்படியே சொன்னார்கள். இயேசு வியந்தார். நூற்றுக்கு அதிபதி தலைவனுடைய ஆழமான நம்பிக்கையையும், அறிவையும் கண்டு மிகவும் ஆனந்தமடைந்தார். அவர் திரும்பி தன்னைப் பின்தொடர்ந்து வந்த கூட்டத்தினரை நோக்கி,

'பாருங்கள். இதுதான் நம்பிக்கை. நான் இஸ்ரவேலரிடத்தில் கூட இத்தனை ஆழமான நம்பிக்கையைக் கண்டதில்லை. உண்மையாகவே உங்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கிழக்கிலும், மேற்கிலும் இருந்தெல்லாம் என்னை நம்பும் மக்கள் வந்து பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே அமர்ந்திருப்பார்கள். ஆழமான நம்பிக்கை இல்லாத ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்' என்றார்.

பின் அனுப்பப்பட்டவர்களை நோக்கி, 'நீங்கள் நிம்மதியுடன் செல்லுங்கள். வேலைக்காரனின் நோய் இந்த வினாடியில் விடைபெற்றிருக்கிறது.' என்றார்.

அவன் அனுப்பப்பட்டவர்கள் வீட்டை நோக்கி ஓடினார்கள். அவர்கள் வீட்டை அடையும் முன் மரணப்படுக்கையில் கிடந்த ஊழியன் முழு உடல்நலத்துடன் வீட்டை விட்டு வெளியே வந்தான். அவர்கள் வியந்தார்கள். ஒற்றைச் சொல்லால் நலமடைந்த வேலைக்காரனை ஆனந்தமாய்ப் பார்த்தார்கள். இயேசு தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தார்.

"நூற்றுக்கு அதிபதியும், அவன் வேலைக்காரனும்" தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: லூக்கா 7:1-10)

யூதருடைய மூப்பர்
நூற்றுக்கதிபதி
மரண அவஸ்தை
வேலைக்காரன்
ஜெபஆலயம்
கப்பர்நகூம்
பிரியமான
சேவகர்



இஸ்ரவேலர்
விசுவாசம்
பாத்திரன்
சிநேகிதர்
வியாதி
இயேசு
தயவு
சுகம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கி | சி | நே | கி | த | ர் | க | நூ | இ | யூ |
| இ | சே | வ | க | ர் | ஜெ | ப் | ற் | யே | த |
| ஸ் | பி | வி | பா | ப் | ப | ப | று | சு | ரு |
| ர | ரி | யா | த் | ன் | ஆ | ர் | க் | வி | டை |
| வே | ய | தி | தி | சு | ல | ந | க | சு | ய |
| ல | மா | வி | ர | க | ய | கூ | தி | வா | மூ |
| ர் | ன | அ | ன் | ம் | ம் | ம் | ப | ச | ப் |
| ம | ர | ண | அ | வ | ஸ் | தை | தி | ம் | ப |
| வே | லை | க் | கா | ர | ன் | த | ய | வு | ர் |

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

# கிறிஸ்துவில் வளர
# பயன்படுத்திக் கொள்ளுங்கள்



திருப்பத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள

## அன்றன்றுள்ள அப்பம்

ஜெப மண்டபத்தில் உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்காக சில ஏற்பாடுகளை செய்துள்ளோம்.







நீங்கள் தனி நபராகவோ, குடும்பமாகவோ அல்லது குழுவாகவோ உபவாசமிருந்து ஜெபிக்க தனித்தனி அறைகள் அங்கே உண்டு. தேவ பிரசன்னம் நிறைந்துள்ள இயற்கை எழில் வாய்ந்த சூழல். அமைதியை விரும்புவோர்களுக்கான தனித்துவமான இடம். இந்த ஜெப மண்டபத்தை ஊழியம் / திருச்சபை சார்ந்த முகாம்கள், கருத்தரங்குகள், வாலிபர் கூட்டங்கள், உபவாச முகாம்கள், Family Meetings போன்ற கூடுகைகள் நடத்தவும், சபை வேறுபாடின்றி யாவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நீங்கள் கர்த்தருக்குள்ளான உறவிலும் ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளரவும் பெலனடையவும் விரும்பினால் இந்த வளாகத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வருடத்தில் 365 நாட்களும் 24X7 நேரமும் உங்களுக்காக இந்த ஜெப மையம் திறந்தே இருக்கும். மனப்பூர்வமான சிறு காணிக்கைக் கொடுத்து இதை பயன்படுத்திக் கொள்ளலாம்.



அன்புடன்

Pastor OSBORNE JEBADURAI

முன் அனுமதிக்கு

**+91 9003067777,+91 9884908777,+91 9884916777**
எண்ணில் தொடர்பு கொள்ளவும்.




If undelivered please return to:


## Elim Glorious Revival Church

**#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India**
**for 24X7 Prayer: 91-9444322200, 9444322211**
**Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com**